# ஆன்மிகத் தடத்தில் இருந்து விலகிவரும் செந்நெறி இசை

**த.றொபேட் அருட்சேகரன்[1]**


## ஆய்வுச்சுருக்கம்:

*இசை என்பது உலகப் பொதுமொழி என்பார்கள். தனித்துவமான பண்புகள் கொண்ட ஒவ்வொரு இனத்தினதும் அடையாளங்களை வெளிப்படுத்தும் சிறந்த கலையாக இசை வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இந்துக்களால் பல நூற்றாண்டுகளாக வளர்த்தெடுக்கப்பட்ட செந்நெறி இசையானது இறைவனைப் போற்றிப் புகழவும் உச்சமான ஆன்மிக உணர்வை அடையவும் பொருத்தமான ஒன்றாகப் பண்டு தொட்டு வளர்க்கப்பட்டு வந்துள்ளது. உலக அளவில் கர்நாடக இசை என அழைக்கப்படும் இசை மரபில் தமிழ், தெலுங்கு, வடமொழி போன்ற மொழிகளிலும் ஏனைய சில மொழிகளிலும் இசைப்பாடல்கள் கையாளப்பட்டு வருகின்றன. அப்பாடல்கள் பல விதமான இறை மூர்த்தங்களைப் போற்றிப் பாடும் பாடல்களாகவே வாக்கேயக்காரர்களால் இயற்றப்பட்டுள்ளன. சைவ, வைணவக் கடவுளர்கள் மீதான துதிப் பாடல்களாக இவை அமைந்துள்ளமை இந்த இசை மரபின் சிறப்பு எனலாம். இப்பாடல்கள் பஜனை முறைகள் ஊடாகப் புகழ் பெற்று அதன் பின்னர் இசை அரங்கின் உருப்படிகளாகவும் மாற்றம் கண்டன. செந்நெறி இசையின் நோக்கத்தை வெளிப்படுத்துதலும். செந்நெறி இசையில் தற்காலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அறிதலும் இந்த ஆய்வின் நோக்கங்களாகும். விவரண ஆய்வாகவும் கள ஆய்வாகவும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வின் வழியாக அவை இனங்காணப்பட்டுள்ளன. குறிப்பாக ஆன்மிகத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வளர்க்கப்பட்ட இசையரங்குகள், அண்மைக்காலத்தில் வியாபாரத்தை மட்டும் முழுமையான நோக்கமாகக் கொண்ட திரைத்துறையால் ஆட்கொள்ளப்பட்டு செந்நெறி இசையின் தூய்மை சிதைக்கப்பட்டு விட்டதை உணரக் கூடியதாக உள்ளது. பொதுமக்களால் விரும்பப்படும் பலம் வாய்ந்த கலையாக விளங்கும் திரைத்துறையின் மாயையில் இசையாளர்களும் இசை ஆய்வாளர்களும் ஈர்க்கப்பட்டுச் சிந்தனைப் பிறழ்வு கொண்டவர்களாகவும் இசையரங்கின் அடிப்படைப் பண்புகளை மாற்றும் இயல்புடையோராகவும் மாறிவருகின்றமை யாவரும் அறிந்ததே. இசையரங்குகளில் திரைப்படப் பாடல்களைப் பாடுதல், திரையிசையும் செந்நெறி இசையும் சரிசமம் எனக் கருத்துரைத்தல், காலத்திற்கு ஏற்ப மாற்றம் தேவை என துறைசாராதோர் சிந்தனைகளைத் தூண்டுதல், செந்நெறி இசை பற்றிய கருத்தாடல்களின் போது திரைப்படங்கள் பற்றிய கருத்துக்களை இணைத்துக் கருத்தாடல்களை மலினப்படுத்துதல் போன்றவற்றை எடுத்துக் காட்டுக்களாகக் கூறலாம். அத்துடன் ''சென்னையில் திருவையாறு'' எனும் நிகழ்வானது திரைப்படப் பாடல் நிகழ்வாக மாற்றம் கண்டுள்ளமை செந்நெறி இசையின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கி உள்ளது என்பதுடன் இளையோர் மனங்களையும் தவறான வழிக்கு இட்டுச் சென்றுள்ளது. இவ்வாறான நிலையில் செந்நெறி இசையானது அதன் ஆன்மிகத் தடத்தில் இருந்து விலகி வருகின்றது என்னும் கருத்தியலின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப் படுகின்றது.*


**திறவுச்சொற்கள்:** செந்நெறி இசை, திரையிசை, இசையாளர்கள், மங்கல இசை, ஆன்மிகம்

[1] *இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
trarudsegaran@gmail.com

**அறிமுகம்**

அனைத்து உயிரினங்களையும் மகிழ்விக்கும் வல்லமை கொண்ட கலையே இசைக் கலையாகும். நாட்டார் இசையாக இருந்து அடிநிலை மக்களையும் ஏனையோரையும் இன்புறச் செய்த இக்கலையானது காலப்போக்கில் செவ்வியல் வடிவம் பெற்றுச் செந்நெறிக் கலையாக மாற்றம் கண்டது. உலகில் இருக்கின்ற இசை வடிவங்கள் அனைத்தினதும் வரலாறுகளில் இவ்வாறான படிமுறை வளர்ச்சியை நாம் காணலாம்.

நாட்டார் இசை என்பது பொது மக்களின் வாழ்வில் வருகின்ற அனைத்து விதமான உணர்வு நிலைகளுக்கும் ஏற்றவாறு இசைபட்டு வளர்ந்து வந்துள்ளது. இன்று வரை அதன் பயன்பாடும் அவ்வாறே இருந்து வருகின்றது. அடிநிலைப்பட்ட மக்களின் தொழில் முறைகள், சிறு தெய்வ வழிபாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே நாட்டார் கலைகளும் இசையும் பெருவளர்ச்சி கண்டு வந்துள்ளது எனலாம்.

ஆனால் செந்நெறி இசையானது பெருந்தெய்வ வழிபாட்டின் ஓர் அங்கமாகவே வளர்ச்சி பெற்று வந்துள்ளது. தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்று இன்று கர்நாடக இசை என அழைக்கப்படும் இசையின் பாடல்கள் சைவ, வைணவத் தெய்வங்கள் மீதான பக்திப் பாடல்களாகவே அதன் வாக்கேயக் காரர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களின் கருத்துக்கள் எல்லை கடந்த ஆன்மிகத்தை வெளிப்படுத்துவனவாகவே காணப்படுகின்றன.

தமிழ் நாட்டில் மக்கள் கலையாக இசைநாடகம் புகழ் பெற்றிருந்த காலத்தில் அறிமுகமான திரைத்துறையானது நாளடைவில் தமிழர்களின் அனைத்துக் கலைகளிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. அந்த வகையில் நாடகக் கலை நலிவடைந்து போவதற்குத் திரைத்துறையே காரணமாக இருந்தது. (பத்மநாபன், அரிமளம், சு., 2008:32) அதே போன்று இசை, நடனம் போன்ற துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

செந்நெறி இசை மரபை நேரடியாகத் திரைத் துறையினர் பின்பற்றிய காலத்தில் இசை விழாக்களின் இசையரங்குகளில் திரைப்படப் பாடல்களை எவரும் பாடியதில்லை. ஆனால் தற்காலத்தில் செந்நெறி இசையரங்குகள் திரையிசை அரங்குகளாக மாறத் தொடங்கி விட்டன. கலைஞர்கள், இசை ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் எனும் அனைத்து நிலையினரும் திரையிசையும் செந்நெறி இசையும் ஒன்று தான் என்று கருத்துரைத்து வருகின்றனர்.

தெய்வ பக்திப் பாடல்களால் புனிதத்தோடு வளர்க்கப்பட்ட செந்நெறி இசையானது அதன் ஆன்மிகத் தடத்தில் இருந்து விலகத் தொடங்கி விட்டது. செவி கொடுத்துக் கேட்க முடியாத திரைப்படப் பாடல்களும் செவி வழி சென்று ஆன்மிகத்தின் கதவுகளைத் திறந்த செந்நெறி இசையும் தற்காலத்தில் ஒன்று எனக் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான மாற்றங்களுக்கான காரணங்களையும் தீர்வுகளையும் இக்கட்டுரையானது ஆராய்கின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இந்த ஆய்வின் நோக்கங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்

- செந்நெறி இசையின் நோக்கத்தை வெளிப்படுத்துதல்
- செந்நெறி இசையின் ஆன்மிகத் தன்மையை அறிதல்
- இசைப் பாடல்களின் கருத்தியல்களை வெளிப்படுத்துதல்
- தற்காலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அறிதல்
- மாற்றங்களுக்கான காரணங்களை அறிதல்
- தீர்வுகளை முன்மொழிதல்

**ஆய்வின் மூலங்கள்**

இந்த ஆய்வானது சமகாலத்தில் இசைக் கலையில் ஏற்பட்டு வருகின்ற ஏற்றுக்கொள்ள முடியாத மாற்றங்கள் பற்றிய ஆய்வாக அமைந்துள்ளது. அத்துடன் இவ்விடயம் தொடர்பான வரலாற்றுத் தரவுகளையும் முன்வைத்து இந்த ஆய்வானது நகர்த்தப்படுகிறது. ஆகவே பின்வருவனவற்றை இந்த ஆய்வின் மூலங்களாகக் கொள்ள முடியும்.

- செந்நெறி இசையின் இலக்கண நூல்கள்
- வாக்கேயக்காரரின் வரலாற்று நூல்கள்
- கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட இசை ஒலி, ஒளிப்பதிவுகள்
- தற்கால இசையரங்கின் ஒலி, ஒளிப்பதிவுகள்
- முதுகலைஞர்களின் கருத்துக்கள்
- இளம் கலைஞர்களின் கருத்துக்கள்
- ஆய்வாளரின் கருத்துக்கள்

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது விவரண ஆய்வாகவும் கள ஆய்வாகவும் முன்னெடுக்கப்படுகிறது.

**ஆய்வுச் சிக்கல்**

இந்த ஆய்வானது பின்வரும் சிக்கல்களை எதிர்நோக்கி நிற்கின்றது.

- செந்நெறி இசையின் இலக்கணங்களாக இனம் காணப்பட்ட கலைஞர்கள் பலர் திரையிசையின் கலைஞர்களாகவும் காணப்படுகின்றனர்
- கல்வி அறிவால் உயர்ந்த விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் போன்றோர் வாக்கேயக் காரர்களின் கீர்த்தனைகளும் திரையிசைப் பாடல்களும் சரிசமமான தகைமை கொண்டவை என்று கருத்துரைத்து வருகின்றனர்.

- திரைத்துறையில் கால் பதிக்கும் கனவோடு திறமையுள்ள மாணவர்கள் இசை கற்று வருகின்றனர்.
- சகல விதமான ஊடகங்களும் திரைத் துறைக்கே முன்னுரிமை கொடுத்து வருகின்றன.

**ஆய்வை நியாயித்தல்**

ஆன்மிகத் தடத்தில் இருந்து விலகி வரும் செந்நெறி இசை எனும் இந்த ஆய்வுக்கான நியாயப்பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம். இசையின் வரலாறு, அதன் நோக்கம், இசையானது வளர்க்கப்பட்ட முறை, தற்கால நிலை போன்ற பல விதமான உப தலைப்புக்களின் ஊடாக இவ்விடயம் ஆராயப்படுகிறது.

**இசைப் பாடல்களின் கருத்துக்களும் அவற்றின் நோக்கங்களும்**

இசைப் பாடல்களை இயற்றியோர் வாக்கேயக்காரர் என அழைக்கப்படுகின்றனர். ஒரு பாடலின் இயலுக்கும் இசைக்கும் சொந்தக் காரராக இருப்பவரே வாக்கேயக் காரர் ஆவார். இசையரங்குகளில் வாக்கேயக் காரரால் உருவாக்கப்பட்ட இசைப் பாடல்களே முதன்மை பெறுகின்றன. சில பாடல்கள் ஒருவரால் இயற்றப்பட்டு வேறொருவரால் இசையமைக்கப்பட்டும் பயன்படுத்தப்படுகின்றன. ஜெயதேவர் அஸ்டபதி, பாரதியார் பாடல்கள், திருவருட்பா போன்றவை இன்னொருவரால் இசைவடிவம் கொடுக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வாக்கேயக்காரர்களில் அதிகமானோர் தமது குல தெய்வத்தை நினைத்து மெய்யுருகிப் பாடி இசையால் வழிபட்டு வந்துள்ளனர். அவர்களது நோக்கம் இறைவனை அடைவதாக மட்டுமே இருந்துள்ளது. பல வாக்கேயக் காரர்கள் உஞ்சவிருத்தி செய்து தமது வாழ்வைக் கழித்து இசையால் இறைவனை வணங்கி வாழ்ந்தார்கள் என்பது வரலாறு ஆகும்.

இவ்வாறான வாக்கேயக் காரர்கள் வாழ்ந்த காலத்து மன்னர்கள், இவர்களை அழைத்துத் தம்மைப் புகழ்ந்து பாடுமாறு வற்புறுத்திய போதும் தமது இசைப் பாடல்களால் இறைவனை மட்டுமே புகழ்ந்து பாடி வந்துள்ளனர். (பக்கிரிசாமிபாரதி, கே.ஏ., 2002 : ப.581) புகழுக்கும் பொருளுக்கும் இசைக்கலையை விலை பேசாத கொள்கை உடையோராக இசைக்கலையின் வாக்கேயக் காரர்கள் வாழ்ந்துள்ளனர்.

இவர்களது பாடல்களின் உட்கருத்துக்கள் ஆன்மிகத்தின் உச்சமாகவே இருந்துள்ளன. தாம் விரும்பிய தெய்வத்தின் மீது எல்லையற்ற பக்தியை வெளிப்படுத்திப் பல விதமான உணர்வு நிலைகளில் பாடல்களைப் பாடியுள்ளனர். பக்தி தவிர்ந்த உணர்வுகளுக்கு இசை வாக்கேயக்காரர்கள் தமது இசைப் பாடல்களில் இடமளிக்கவில்லை என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமாகும். அனைத்து வாக்கேயக்காரர்களின் பாடல்களிலும் இப்பண்பைக் காண முடியும்.

எடுத்துக்காட்டு - உன்னையல்லால் - இயற்றியவர், பாபநாசம் சிவன், இராகம் - கல்யாணி, தாளம் - ஆதி

*அனுபல்லவி*

*என்னையோர் வேடமிட்டுலக நாடக அரங்கில் ஆடவிட்டாய் - என்னால்*

*இனியாட முடியாது திருவுளம் இரங்கி ஆடினது போதுமென் றோய்வளிக்க*

*பல்லவி*

*உன்னையல்லால் வேறே கதி இல்லையம்மா*

"இவ்வுலகத்தில் நான் படுகின்ற துன்பங்களை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது, எனக்கு நித்திய பேரின்பத்தை வழங்க உன்னால் மட்டுமே இயலும்" என்று அம்பிகையை நோக்கிப் பாபநாசம் சிவன் அவர்கள் மெய்யுருகிப் பாடுகின்றார். (சிவன் பாபநாசம், 1945 : ப.104)

பக்தி நெறிப் பாக்களாக விளங்கும் திருமுறைப் பாடல்கள் தமிழ் மொழிச் செழுமையும் ஆன்மிகத்தின் உச்சத்தையும் கடந்தவை ஆகும். இப்பாடல்களை அருளியவர்கள் இறைவனால் உந்தப்பட்டவர்களாகவும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட தெய்வீகமானவர்களாகவுமே கொள்ளப்படுகின்றனர். இறைவனே இசை வடிவினன் எனும் நம்பிக்கை இந்து சமயத்தில் மேலோங்கி நிற்கின்றமை யாவரும் அறிந்ததே.

**இசையரங்கின் தனித்துவங்கள்**

ஆலய வீதிகளிலும் ஆலயங்களிலும் வாக்கேயக்காரர்கள் வாழ்ந்த இடங்களிலும் இசைக்கப்பட்டு வந்த இசைப்பாடல்கள் நாளடைவில் குரு குல முறையில் வளர்க்கப்பட்டு பரவலாகி வந்ததுடன் இசையரங்கிற்கான பாடல்களாகவும் அமைந்தன.

இராகங்களுக்கான தனித்துவங்கள், சிறப்புக்கள், தாள - லய நுட்பங்கள், மொழிச் சிறப்புக்கள் என்பவற்றுடன் இரண்டறக் கலந்ததாக ஆன்மிகத் தத்துவங்களும் கருத்துக்களும் இசையரங்கின் ஊடாக வளர்க்கப்பட்டு வந்தது. இவ்வாறான இசை அரங்க நிகழ்வுகள் ஆலயங்களில் வழிபாடாக நிகழ்த்தப்பட்டு வந்த போதும் நாளடைவில் இசை விழாக்களாகத் தொடர் நிகழ்வாக இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் வளர்ச்சி காணத் தொடங்கியது.

இசைவிழாக்கள், பார்வையாளருக்கான சிறந்த உளமகிழ்வை அளித்து வந்தது. அத்துடன் கலைஞர்களுக்கும் வாழ்வாதாரத்தை வழங்குகின்ற தொழிலாகவும் விளங்கியது. இசை என்பது மன மகிழ்வுக்கான சிறந்த ஊடகமாக இருக்கின்ற போதும் தமிழ்நாட்டில் வளர்த்தெடுக்கப்பட்ட செந்நெறி இசையானது முழுமையாகத் தெய்வ பக்தி இசையாகவே வளர்ந்து வந்துள்ளது.

மொழி கடந்து இசையை இரசிக்க முடியும் என்றாலும் இசையின் செழுமையைக் காத்தும் இசைக்கு அர்த்தம் கொடுத்தும் நிற்பது மொழியே ஆகும். பல்வேறு விதமான

ஆன்மிகக் கருத்துக்களையும் நிலை பேற்றிற்கான தத்துவங்களையும் இசைப் பாடல்கள் உள்ளடக்கி உள்ளன. (அங்கயற்கண்ணி, இ., 2010 : ப.77)

பக்தி நெறிக்கான கலையாக இசை காணப்படுகின்ற போதும் அண்மைக்காலத்தில் இசையரங்குகள் கலைஞர்களின் வித்துவங்களை வெளிப்படுத்தும் களமாகவும் மாறி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வித்துவங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் இடங்களில் இசையின் முதன்மையான நோக்கமாக இருக்கும் ஆன்மிக உணர்வு பின்தள்ளப் படுகின்றது என்பதும் உண்மையே.

**இசைக் கலையின் வளர்ச்சிப் படிமுறை**

செந்நெறி இசையானது தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் புகழ்பெற்ற கலையாகப் போற்றப்பட்டுத் தற்காலம் வரை வளர்க்கப்பட்டு வருகின்றது. இக்கலையானது ஆலய வழிபாடுகளின் ஊடாகவே மக்கள் மயப்பட்டும் புகழ்பெற்றும் வளர்ந்தது. நாட்டார் இசை மரபில் இருந்து செந்நெறி இசை மரபின் இரசனைக்கு மக்களை ஈர்த்தது ஆலயங்களே என்பர்.

தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் தொடர் இசை விழாக்கள் மூலம் ஆயிரக்கணக்கான இசை அரங்க நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இசை விழாக்கள் மூலம் வளர்க்கப்பட்ட இசைக் கலையானது உலகில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வளர்க்கப்பட்டு வருவதுடன் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களாலும் ஓரளவு வளர்க்கப்பட்டு வருகின்றது.

ஈழத்திலும் இவ்வாறான இசைவிழாக்கள் நிகழ்த்தப்பட்ட போதும் நீண்ட கால உள்நாட்டுப் போரின் தாக்கத்தால் கலைவிழாக்களும் இசை விழாக்களும் நலிவடைந்து போயுள்ள நிலையில் தற்காலத்தில் மீளவும் எழுச்சி பெற்று வருகின்றது எனலாம்.

இசைக் கலையின் புனிதத்தையும் மரபையும் பேணும் வகையிலேயே இவ்விசை விழாக்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மிக நுணுக்கமாக இசையை இரசிக்கும் இரசிகர்களும் தமது கருத்துக்களால் இசைக் கலைஞர்களை ஊக்கப்படுத்தி வந்துள்ளனர். அதை விட நேர்மையான விமர்சனங்களாலும் இசைக் கலையானது உயர் நிலையடைந்தது எனலாம்.

இசைக் கலையின் வரன்முறையான நெறிமுறைகள் பற்றியதாகவே புகழ் பெற்ற விமர்சனங்கள் எழுதப்பட்டுள்ளன. இராக ஆலாபனை, உருப்படிகளுக்கான காலப்பிரமாணம், சாகித்தியங்களின் பொருள் உணர்ந்து பாடும் திறன், நிரவலுக்குப் பொருத்தமான இடம், உச்சரிப்பு, உருப்படிக்குப் பொருத்தமான இராக ஆலாபனை, இராக பாவம், சர்வலகுக் கற்பனாஸ்வரம், கணக்கு வழக்கு, புதிய தேடல், பயிற்சி, குரல் வளம், கற்பனை வளம்

போன்ற பல விடயங்களை உதாரணங்களோடும் ஆதாரங்களோடும் வெளிப்படுத்தும் விமர்சனங்களாலும் இசைக்கலையானது வளர்க்கப்பட்டது. அத்துடன் இசையாளர்களுக்கிடை யிலான போட்டிகளும் ஆரோக்கியமானவைகளாகவே இருந்தன.

தென்னிந்தியச் செவ்விசையின் வளர்ச்சி என்பது மிக உயர்ந்த தராதரத்தின் அடிப்படையிலும் தெய்வீகத் தன்மை பொருந்தியதாகவுமே இறைவனின் பெயரால் வளர்ச்சி பெற்றுப் புகழடைந்து வந்துள்ளது என்பதை அதன் தனித்துவமாகக் கொள்ளலாம்.

**இசைக் கலையின் தற்கால நிலை**

கணனி மயப்பட்ட, இலத்திரனியல் வயப்பட்ட தற்கால உலகில் அனைத்துத் துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சில துறைகள் இவ்வாறான மாற்றங்களால் ஏற்றம் பெற்று வந்தாலும் பண்பாட்டின் கூறுகளாக விளங்கும் மரபு வழியான கலைகளில் இவை பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. அந்த வகையில் செந்நெறி இசை மரபும் பலவிதமான சவால்களைச் சந்தித்து வருகின்றது.

குறிப்பாகத் தமிழ்த் திரைப்படங்கள் வேகமான வளர்ச்சியடைந்து அனைத்து விதமான துறைகளையும் ஆக்கிரமித்திருப்பதைப்போன்று இசைக் கலையையும் தன்வசப்படுத்தி விட்டது எனலாம். சமூக வலைத்தளங்களின் பயன்பாடும் இதற்கோர் காரணமாகும்.

அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்த் திரைப்படங்களில் செந்நெறிப் பாடகர்கள் பாடியிருந்தாலும் அப்பாடல்களைத் தமது இசை அரங்குகளில் பாடவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். திரைத்துறையையும் தமது இசைத் துறையையும் கலக்கவில்லை. இசையரங்கிற்கான புனிதத்தைப் பேணத் தவறவுமில்லை.

கடந்த சில ஆண்டுகளாக தென்னிந்தியாவின் இசை விழாக்களில் சித்ஸ்ரீராம் எனும் பாடகர் தனது இசையரங்குகளில் திரைப்படப் பாடல்களைப் பாடி வருவதும் இந்த இசையரங்கிற்கான பக்கவாத்தியக் கலைஞர்களாக உமையாள்புரம் சிவராமன் போன்ற மேதைகள் இருப்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடயங்கள் ஆகும்.

தற்காலத்தில் திரைத்துறையில் ஈடுபடுவோர் மட்டுமல்லாமல் ஏனையோரும் திரைப்படப் பாடல்களைச் சமூக வலைத்தளங்களின் ஊடாகப் பாடி வருவதுடன் தமது இசையரங்குகளில் இப்பாடல்களை இணைத்தும் வருகின்றனர். அதை விட திரைப்படப் பாடல் நிகழ்வுகளையும் வழங்கி வருகின்றனர். கேள்விஞானத்தில் பாடுபவர்களே முற்காலத்தில் திரைப்படப் பாடல் நிகழ்வுகளை வழங்கி வந்தனர். தற்காலத்தில் செந்நெறி இசையாளர்களே இசைக்குழுக்களை நடாத்தி வருகின்றனர்.

வளர்ந்து வருகின்ற சந்ததிக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டிய கலைஞர்கள் செந்நெறி இசையின் புனிதத்தைக் கேள்விக்குறியாக்கி விட்டனர் எனலாம். பொது மக்கள் கலையாக விளங்கும் திரையிசையையும் தெய்வ பக்தியை வளர்த்த செந்நெறி இசையையும் ஒன்றுக்கொன்று சமம் எனும் மாயையை உருவாக்கி விட்டனர்.

செந்நெறி இசையாளர்கள் என அடையாளம் காணப்பட்ட பல இசையாளர்கள் இவ்வாறான நிலைக்குக் காரணர்களாக இருக்கின்றனர். சமூக வலைத்தளங்களின் ஊடாகப் பாடல்களைப் பாடியும் இசைக்கருவிகளில் வாசித்தும் இவ்வாறான இசையாளர்கள் தம்மை உலகறியச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இலகுவாகப் பெரும் புகழ் பெறலாம் எனும் ஆசையே இதற்குக் காரணம் எனலாம்.

இவ்வாறு திரைத்துறையில் அதிகமாக ஈடுபட்டு வரும் இசையாளர்களின் இசையரங்குகள் தூய்மை அற்று வருவதும் யாவரும் அறிந்ததே. மாணவர்களை வழிப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கும் இசை ஆசிரியர்களும் திரைத்துறையில் தம்மை ஈடுபடுத்தி வருவதால் மாணவர்களைக் கண்டிக்கும் தகைமை அற்றவர்களாகவும் அவர்கள் இருந்து வருகின்றனர்.

முறையான இசையறிவைப் பெறு முன்னரே இசைபயிலும் மாணவர்கள் திரைப்படப் பாடல்களில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். இவர்களுக்கான ஊக்க சக்திகளாகவும் முன்னுதாரண புருசர்களாகவும் இசை ஆசிரியர்களும் இசைக் கலைஞர்களும் விளங்கி வருகின்றனர்.

தற்காலத்தில் செயற்பட்டு வருகின்ற ஊடகங்களும் இவ்வாறான முயற்சிகளுக்கே முன்னுரிமை கொடுத்து வருகின்றனர். செந்நெறி இசையை வளர்க்கும் விருப்பமோ அல்லது மரபு வழியான கலைசார்ந்த அறிவோ அற்றவைகளாகவே தற்காலத்தின் ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன.

**ஆய்வாளர்களின் போக்குகள்**

இசைக் கலையின் வளர்ச்சிப் போக்கில் துறைசார்ந்த ஆராய்ச்சிகளும் வளரத் தொடங்கி விட்டன. இவ்வாறான ஆராய்ச்சிகளை இரண்டாக வகைப்படுத்தலாம். வரலாற்றுக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு எனவும் செய்முறை சர்ந்த திறன்களை அடிப்படையகக் கொண்ட ஆய்வு எனவும் வகைப்படுத்தலாம். அதாவது ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியோர் ஆற்றுகையாளர் அல்லாதவர்களாகவும் இசை உருப்படிகளைத் தொகுத்தும் அவை பற்றிய கருத்துக்களை எழுதியோர் ஆற்றுகையாளர்களாகவும் இருந்துள்ளனர்.

தற்காலத்தில் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளில் அதிகமானவை தனியே அறிமுறை சார்ந்தவைகளாகவும் இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டவைகளாகவும் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன. சுருங்கக் கூறின் சமூகத்திற்குப் பயனற்றவைகளாகவும் ஆய்வாளரின் பதவி உயர்வுக்குத் துணைபுரிவதாகவுமே முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான இசை ஆய்வாளர்களில் அதிகமானோரின் சிந்தனைகள் திரைத்துறை பற்றியதாகவே காணப்படுகின்றன. இவ்வாறான அணுகு முறைகள் செந்நெறி இசையின் தனித்துவத்தைச் சிதைவடையச் செய்து வருகின்றது எனலாம். அதாவது மரபு வழியான இசை வாக்கேயக்காரர்களுக்கும் திரைப்பட இசையமைப்பாளர்கள், பாடகர்களுக்கும் இடையேயான தராதரத்தின் வேறுபாட்டை இவ்வாறான ஆய்வாளர்கள் கண்டுணரத் தவறுகின்றனர்.

இப்படியான நிலையில் இருக்கும் ஆராய்ச்சித் துறையினர் ஆய்வு மாணவர்களைத் தவறான முறையில் நெறிப்படுத்தி ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் ஆய்வு முறையியலில் தேர்ந்தோர் எனக் கருதப்படும் பிற துறை சார்ந்தோர் பொருத்தமற்ற ஆராய்ச்சி அணுகுமுறைகளை அழகியற்கலை சார்ந்த ஆய்வுகளில் பிரயோகித்தும் வருவதுடன் பாடத்திட்ட வடிவமைப்புக்களிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஒட்டுமொத்த இசைச் சமூகத்தையே தவறான வழிக்கு இட்டுச் செல்லும் வழிமுறைகளே தற்கால ஆய்வாளர்களால் முன்மொழியப்படுகின்றன.

ஆகவே தற்காலத்து இசை ஆய்வாளர்களும் செந்நெறி இசையின் ஆன்மிக வளத்திற்குச் சவாலானவர்களாகவே இருந்து வருகின்றனர்.

**மங்கல இசையில் ஏற்பட்ட மாற்றங்கள்**

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் மங்கல இசையானது ஆலயங்களிலும் ஏனைய சடங்குகளிலும் முதன்மையான இடத்தில் வைத்துப் போற்றப்பட்டாலும் அண்மைக்காலமாக இக்கலையானது திரையிசை நிகழ்வாக மாறி விட்டது எனலாம். மங்கல நிகழ்வுகளிலும் ஆலயத் திருவிழாக்களிலும் நிகழ்த்தப்பட்டு வரும் நாதஸ்வர இசையானது ‘‘இசைக்குழு’’ எனும் அமைப்பில் நிகழ்த்தப்படுகிறது. திரையிசையில் நாட்டம் கொண்ட ஏற்பாட்டாளர்களே அனைத்து இடங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

விரிவான இராக ஆலாபனை, பாடாந்தரம் கொண்ட உருப்படிகள், கணக்கு வழக்குகள், இசைப் பாரம்பரியம் போன்ற அம்சங்கள் பொருந்திய மரபு வழியான மங்கல இசைக் கச்சேரிகள் தற்காலத்தில் நிகழ்த்தப்படுவதில்லை எனலாம். பெரும் எடுப்பில் திரையிசை நிகழ்வுகளே மங்கல இசையாக நிகழ்த்தப்பட்டு அதன் தனித்துவம் இல்லாமல்

செய்யப்பட்டுள்ளது. ஊடகங்களும் இவ்வாறான நிகழ்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. சரியான வழிப்படுத்தல் இல்லாத கலையாக மங்கல இசைக்கலை மாறிவிட்டது.

ஆலயங்களின் தெய்வீகத்தைப் பறைசாற்றிய நாதஸ்வர, தவில் கலையானது சிறுமைப்பட்டுச் சிறிய வட்டத்தினுள் சுருங்கி விட்டது என்பதை தற்கால நிகழ்வுகள் எடுத்தியம்பி நிற்கின்றன. வளர்ந்து வரும் இளம் தலைமுறையானது துறைசார்ந்த வளர்ச்சி அற்றவர்களாகத் திரைத்துறையில் மட்டும் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர்.

ஆலயங்களின் புனிதத்தைப் பேணுகின்ற செயற்திட்டங்களை ஆலய நிர்வாகங்கள் முன்னெடுக்கவில்லை. பொது மக்களின் அனைத்து விதமான விருப்பங்களுக்கும் இடமளிக்கின்ற இடமாக ஆலயங்கள் இருக்கின்றமையும் மங்கல இசையின் மாற்றங்களுக்கான காரணங்களாகக் காணப்படுகின்றன.

**சிந்தனை மாற்றங்களுக்கான காரணங்கள்**

இசைத்துறையில் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களுக்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்

- அனைத்து விதமான ஊடகங்களும் திரையிசைக்கும் திரையிசை சார்ந்த நிகழ்வுகளுக்குமே முன்னுரிமை கொடுத்து வருகின்றன.
- ஊடகங்கள், திரையிசைக் கலைஞர்களைப் பிரமாண்டங்களாகக் காண்பித்து வருகின்றன.
- எடுத்துக்காட்டுக்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருக்க வேண்டிய முன்னணிக் கலைஞர்கள், ஆசிரியர் எனும் நிலையில் உள்ளோர் திரையிசைக் கலைஞர்களாகக் காணப்படுகின்றனர்.
- செந்நெறி இசையரங்கு, திரையிசை அரங்காக மாற்றப்பட்டதில் இசை ஜாம்பவான்களின் பங்கு இருந்து வருகின்றது.
- செந்நெறி இசை என்பது இறைவழிபாட்டிற்குரியது என்பதை ஆழமாக உணரத் தவறியவர்களாகத் தற்காலத்தின் இளம் இசையாளர்கள் வளர்ந்து வருகின்றனர்.
- இயந்திர மயப்பட்ட நவீன உலகில் முதன்மையான மக்கள் கலையாக விளங்கும் திரைத்துறையானது மிகுந்த செல்வாக்கையும் பொருளாதாரத்தையும் புகழையும் வழங்குகின்ற துறையாக இருப்பதால் இசையாளர்கள் பலரும் இத்துறையின் பால் ஈர்க்கப்படுகின்றனர்.
- தொடக்க காலத்தில் இசைத்துறையில் புகழ் பெற்ற கலைஞர்களால் திரைத்துறை பெருமை அடைவதாகவே கருதப்பட்டது. தற்காலத்தில் இந்நிலை தலைகீழாக மாறி விட்டது.

- திரையிசையில் ஈடுபடுவதால் தமது பொருளாதாரத்தை வளப்படுத்தலாம் எனும் நம்பிக்கை உடையோராக இசையாளர்கள் காணப்படுகின்றனர்.
- இசையாளர்கள் சமூக அக்கறை அற்றவர்களாகவும் சிந்தனை ஆற்றல் குறைந்தவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் ஊடாகச் சிந்தனைத் திறன் அற்ற பரம்பரை தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டு வருகின்றது.
- வரன்முறையான இசை விழாக்கள், ஆராய்ச்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாமல் இணையவழியிலான நிகழ்வுகளாக அனைத்தும் மாறிவிட்டதால் இசை இரசனை வளர்க்கப்படவில்லை.
- பக்கச்சார்பற்ற விமர்சனங்கள் இல்லாமல் போயுள்ளன.

**முடிவுகள்**

செந்நெறி இசை என்பது இறை வழிபாட்டிற்கு உரிய உயர்ந்த கலை என்னும் தெளிவற்றவர்களாக இசையாளர்கள் மாறி வருகின்றனர்.

வாக்கேயக்காரர்களால் இறை வழிபாடாக வளர்க்கப்பட்ட இசையானது வணிக நோக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட திரையிசையோடு சரிசமமாக ஒப்பிடும் நிலை தோன்றியுள்ளது.

திரைத் துறையானது வியாபாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட சமூக அக்கறை அற்ற துறை என்பதை இசையாளர்கள் உணரத் தவறியுள்ளனர். திரையிசைக்கான ஆற்றுகைக் களமாகச் சைவாலயங்கள் மாறி வருகின்றன. மங்கல இசையானது அதன் தனித்துவத்தை இழந்து வருகின்றது.

ஆராய்ச்சித் துறையில் உயர்ந்த இடங்களை அலங்கரிப்போர் இசையின் தனித்துவத்தை அறியாதவர்களாக இருப்பதுடன் கேள்வி ஞானத்தினாலும் வாசிப்பினாலும் பெற்ற அறிவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அனைவரையும் வழிப்படுத்தி வருவதுடன் தவறான கருத்துக்களையும் கூறி வருகின்றனர்.

**பரிந்துரைகள்**

இசை முதலான அனைத்துக் கலைகளினதும் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கிய ஆலயங்களின் தெய்வீகம் பேணப்பட்டு அவற்றின் ஆன்மிகச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் ஆலயங்களுக்கான மங்கல இசை மரபு வழியான இசையாகப் பேணப்பட வேண்டும் இசைக் கலையில் ஆசிரியர்களாக இருப்போர் மாணவர்களைச் சரியாக வழிப்படுத்த வேண்டும் இசைப் பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தப்படும் ஆன்மிகக் கருத்துக்கள் மாணவர்களுக்கும் இரசிகர்களுக்கும் உணர்த்தப்பட வேண்டும் செந்நெறி இசை பற்றிய ஆய்வுகள் துறைசார்ந்த வாண்மையுடன் அணுகப்படவேண்டும்

ஊடகங்கள் செந்நெறி இசை சார்ந்த ஆற்றுகைகளுக்கும் கருத்தாடல்களுக்கும் முதன்மை கொடுப்பதுடன் திரையிசையின் மாயையில் இருந்து விடுபடவேண்டும் செந்நெறி இசையைத் தொழில் முறையாகக் கொள்ளக் கூடியவாறு கலை விழாக்கள், இசை விழாக்கள், திருவிழாக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**உசாத்துணை**


பக்கிரிசாமி பாரதி, (2004), இந்திய இசைக் கருவூலம், குசேலர் பதிப்பகம், சென்னை.

சுந்தரம், பி.எம்., (2001), மங்கல இசை மன்னர்கள், மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை.

நாராயணன், (2002), தமிழ் சினிமாவின் கதை, ஐயனார் பதிப்பகம், சென்னை.

பாபநாசம் சிவன், (1996), கீர்த்தன மாலை, இராஜன் பதிப்பகம், சென்னை.

பெருமாள் ஏ.என்., (1984), தமிழர் இசை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பத்மநாபன், அரிமளம் எஸ்., (2008), சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகக் களஞ்சியம், காவ்யா பதிப்பகம், சென்னை.

அங்கயற்கண்ணி, (2010), பண்ணும் இலயமும், கலையகம் பதிப்பகம், தஞ்சாவூர்.